[13th September 1958

Salt

* 228-H *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of salt factories in the coastal districts;

(*b*) the quantity produced by such factories per year; and

(*c*) whether salt is exported to other States?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There are 46 (forty-six) licensed salt factories in the coastal districts of this State.

(*b*) The total quantity of salt produced by such factories per year is about 150 lakhs maunds (one hundred and fifty lakhs).

(*c*) Yes, Sir.

SRI K. RAMACHANDRAN : இந்த இடங்களில் அரசாங்கம் ஏதாவது ஸால்ட் பாக்டரி நடத்துகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.

Coir

228-I *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any scheme to organize coir industry on a large scale in our State; and

(*b*) if so, the details of such scheme?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. RAMACHANDRAN : நமது மாகாணத்தில் பல பகுதிகளில் சிறு சிறு அளவிலே இம்மாதிரி கயிறு தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஒட்டுமொத்தமாக ஒரு ஆலை ஏற்படுத்தி சுத்தமாக கயிறு உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கயிறு தொழிற்சாலை சிறு தொழிற்சாலையாக நடத்தினால் தான் நன்றாக நடைபெற முடியும். எப்படி இரும்பு, எஃகு பெரிய தொழிற்சாலையாக நடத்தினால்தான் கட்டுபடியாகும் என்று சொன்னேனோ, அது போல கயிறு உற்பத்தி செய்யும் தொழில் சிறு தொழிலாக இருந்தால்தான் கட்டுபடியாகும். அதற்காக கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கேரளா நம்மைவிட்டுப் பிரிந்து போன பிறகு இந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தஞ்சாவூர் ஜில்லாவில் முத்துப்பேட்டை பகுதியில் இந்தத் தொழிலை ஆரம்பித்தால் ஒருவாறு இதை சமாளிக்கலாம் என்பதை உணர்ந்து, இந்தப் பகுதியில் உடனடியாக கூட்டுறவு சங்கம் ஆரம்பிப்பதற்கு ஏதாவது திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது திட்டம் தீட்டுவதற்காக ஏதாவது வேலை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அம்மையார் சொல்லுவதற்கு முன்னாலேயே அங்கு சொஸைடிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. (சிரிப்பு).